**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 173 - 2022**

**2025ம் வருடம் நவம்பர் மாதம் 25 ம் நாள் செவ்வாய்கிழமை**

**பி.வா.சா.3 – மாயகிருஷ்ணன்** **25.11.2025**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் 150/7 ஆகும். தாவா சொத்தின் சர்வே எண்ணை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் பாக்கியம், குமரேசனை எனக்கு தெரியும். தாவா சொத்தில் என்ன விவசாயம் செய்தேன் என்றால் நெல் விவசாயம் செய்தேன். தாவா சொத்தில் நெல் விவசாயம் செய்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் உள்ளது. தாவா சொத்தில் தற்போது 1 வருடமாக விளைச்சல் இல்லை. தாவா சொத்திற்கு காப்பீடு செய்துள்ளேனா என்றால் நான் செய்யவில்லை 1, 2 பிரதிவாதிகள் செய்திருப்பார்கள். தாவா சொத்திற்கு கீழமேல்குடி கண்மாயிலிருந்து தண்ணீர் பாய்ச்சுவதற்கு வாய்க்கால் உள்ளது. இந்த வழக்கில் ஏற்கனவே சொன்ன சாட்சிகளின் சாட்சியத்தை நிரூபணம் செய்யும் வகையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த விவசாயமும் செய்யவில்லை தாவா சொத்தில் காட்டுக்கருவேல மரங்கள் முளைத்து பல வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரியல்ல,

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை